**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 13.06.2025</u>**

**OS.49/2014**

**பி.வா.சா. 2 திரு. சுப்பிரமணி**

**பி.வா.சா. 2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது சொந்த ஊர் எது என்றால் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், முருங்கபட்டி கிராமம். சோலைக்கொட்டாய் கிராமத்தில் நான் எத்தனை வீட்டுக்காரர்கள் வசிக்கிறோம் என்றால் 40 முதல் 50 குடும்பத்தார் வசிக்கிறார்கள். நான் வசிக்கும் ஊரில் தேவேந்திர குல வேளாளர் சமுகத்தை சேர்ந்தவர்கள் வசிக்கிறார்களா என்றால் நானும் அதே சமுகத்தை சேர்ந்தவர் தான். அங்கு சோலைக்கொட்டாய் கிராமத்தில் வன்னியர் சமூகத்தினர் வசிக்கிறார்களா என்றால் அவர்களும் 40 முதல் 50 குடும்பத்தார்கள் வசிக்கிறார்கள். இந்திராணி கணவர் சின்னசாமி, சின்னம்மாள், பார்வதி ஆகியோர் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நாகம்மாள் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் அவர் பாப்பிரெட்டிபட்டி அருகில் உள்ள கந்தகவுண்டனூர் சேர்ந்தவர்.

2) அவர்களும் சோலைக்கொட்டாய் கிராமத்திற்கு பிழைப்பிற்காக வந்தவர்கள், நாங்களும் அங்கு பிழைப்பிற்காக வந்தவர்கள் என்றால் சரிதான். சோலைக்கொட்டாய் கிராமத்திற்கும் அக்ரஹாரம்–வேளாம்பட்டி கூட்ரோட்டிற்கும் 2 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். அக்ரஹாரம்–வேளாம்பட்டி கூட்ரோடு அருகே தார்ரோட்டிற்கும் வடக்கில் நாகம்மாள் அவரது கணவருடன் குடிசை அமைத்து வசித்து வந்தார் என்றால் சரிதான். சின்னசாமி என்பவரும் அதே அக்ரஹாரம்–வேளாம்பட்டி கூட்ரோட்டில் தார்சாலையின் தெற்கு பக்கம் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். சின்னசாமி தனியாகவும், அவரது அம்மா நாகம்மாள் தனியாகவும் வாழ்ந்து வந்தார்கள் என்றால்

சரிதான். சின்னசாமி அவரது மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சின்னசாமி தினசரி சாப்பாட்டிற்கு என்ன செய்தார் என்றால் ஜெயக்கொடி 10, 50 காசு கொடுத்து வந்தார்.

3) சின்னசாமி அக்ரஹாரம்–வேளாம்பட்டி கூட்ரோட்டின் தெற்கு பகுதியில் வசித்து வந்து, பின்னிட்டு அரூர் கால்நடை மருத்துவமனை எதிரே வசித்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சின்னசாமி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் ஆடு, மாடு வியாபாரம் செய்து வந்தார். வேளாம்பட்டி கூட்ரோடு அருகே ஆரம்ப பள்ளி உள்ளது என்றால் சரிதான். அங்கே சின்னாசாமியின் பிள்ளைகள் சங்கீதா, மாதேஷ், மாலதி ஆகியோர் படித்தார்கள், அங்கேயே உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) சின்னசாமி கல்யாணம் செய்துகொண்டாரா என்றால் கல்யாணம் செய்தார் ஆனால் அவருடைய மனைவி அவரை விட்டு ஓடிவிட்டது. நான் சின்னசாமியின் கல்யாணத்திற்கு சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. சின்னசாமியின் மனைவி எந்த ஊரில் வாழ்ந்து ஓடிவிட்டது என்றால் சோலைக்கொட்டாய் கிராமத்தில் இருந்து தான் ஓடிபோனார். சின்னசாமியின் ஓடிப்போன மனைவியின் பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. சின்னசாமி என்பவரின் சொந்த அத்தை மகள் தான் வாதி இந்திராணி அவரை தான் சின்னசாமி திருமணம் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சின்னசாமி எந்த சமயத்திலும், சோலைக்கொட்டாயில் வசிக்கவில்லை, அக்ரஹாரம்–வேளாம்பட்டி கூட்ரோடு, அரூர் கால்நடை மருத்துவமனை எதிரே தான் வசித்து வந்தார் என்றால் வேளாம்பட்டி கூட்ரோட்டில் வசித்தது மட்டும் தான் எனக்கு தெரியும்.

5) சின்னசாமியின் மனைவி ஓடிவிட்டதாக சொல்லியுள்ளேன் அவர்களுக்கு குழந்தைகள் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சின்னசாமியின் ஓடிப்போன மனைவி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியுமா என்றால் நான் 4ம் வகுப்பு படித்துள்ளேன், ஓரளவுக்கு படிக்க தெரியும். இந்த வழக்கு சொத்து தெரியும் என்று சொல்லியுள்ளேன், சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

6) தாவா சொத்திற்கு நாகம்மாளுக்கு டி கார்டு பட்டா கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அதனை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு கொடுக்கப்பட்ட டி கார்டு பட்டா தற்போது யாரிடம் உள்ளது என்றால் ஜெயக்கொடியிடம் உள்ளது. நான் சொல்லுவதுபோல தாவா சொத்து நாகம்மாளுக்கு டி கார்டு பட்டா கொடுக்கப்படவில்லை, வாதி, வாதியின் கணவர் சின்னசாமி, சங்கீதா, மாதேஷ், மாலதி ஆகியோர் முள்காடு வெட்டி சம்பாதித்த சொத்து என்று சொன்னால் பார்வதி, சின்னம்மாள், ஜெயக்கொடி, நாகம்மாள், சின்னசாமி ஆகியோர் சம்பாதித்தது மட்டும் தான் தெரியும். நாகம்மாள் சம்பாதித்ததாக சொல்லியுள்ளேன் அப்போது சின்னம்மாள், ஜெயக்கொடி, பார்வதி ஆகியோருக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 10, 12 வயது இருக்கும். 10ம் பிரதிவாதி சிவா என்பவரை தெரியுமா என்றால் அவரை எனக்கு யார் என்று தெரியாது. வழக்கு நடந்த சொத்திற்கும், சிவாவிற்கும் ஏதாவது சம்மதம் உண்டா என்றால் அதுவெல்லாம் கிடையாது.

7) ஜெயக்கொடிக்கு எத்தனை மகன்கள் என்றால் ஒரே மகன், அவர் பெயர் சிவன். இவ்வழக்கில் 10ம் பிரதிவாதி சிவா என்பவர் யார் என்றால் அது எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி பார்வதிக்கு எத்தனை குழந்தைகள்

என்றால் இரண்டு மகன்கள், ஒரு மகள், அவர்கள் பெயரெல்லாம் தெரியாது. 5ம் பிரதிவாதி பார்வதி மகன் சிவக்குமாருக்கும் இந்த வழக்கிற்கும் ஏதாவது சம்மதம் உண்டா என்றால் இல்லை. 11ம் பிரதிவாதி சுந்தரம் மகன் ராஜேந்திரன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் எங்கள் காட்டிற்கு அருகில் தான் வசிக்கிறார். ராஜேந்திரன் மனைவி தனம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 8ம் பிரதிவாதி தனம், அவரது கணவர் 11ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கும், இந்த வழக்கிற்கும் ஏதாவது சம்மதம் உண்டா என்றால் இல்லை.

8) கூட்ரோடு பெரியவீரன் மகன் சென்னையன் 7ம் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியாது. அந்த சென்னையனுக்கும், இந்த வழக்கிற்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா என்றால் இல்லை. நான் ஊர்கவுண்டரா என்றால் இல்லை. சோலைக்கொட்டாய் கிராமத்திற்கு ஊர்கவுண்டர் உள்ளாரா என்றால் உள்ளார் அவர் பெயர் அருணாச்சலம் ஆகும். தாவா சொத்து முழுவதும் யார் சாகுபடி செய்கிறார்கள் என்றால் ஜெயக்கொடிக்கு விட்ட சொத்தை மட்டும் ஜெயக்கொடி சாகுபடி செய்கிறார். ஜெயக்கொடிக்கு விட்ட சொத்து என்ன சர்வே எண் என்றால் அதுவெல்லாம் எனக்கு தெரியாது. ஜெயக்கொடிக்கு கொடுத்த பூமி எவ்வளவு என்று தெரியுமா என்றால் இரண்டே கால் ஏக்கரா இருக்கும். சின்னசாமி இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் இல்லை.

9) சின்னசாமி எங்கு இறந்தார் என்றால் வடகரை கிராமத்தில் இறந்தார். நான் போலீஸ் ஸ்டேசன் கோர்ட்டிற்கு வருவது உண்டா என்றால் வேலை இருந்தால் வருவேன். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் ஜெயக்கொடி தான் அழைத்து வந்தார். என் பெயரில் நிலம் உள்ளதா என்றால் ஒன்றும்

கிடையாது. என்னை யாராவது அழைத்தால் காவல் நிலையம் செல்வது, கோர்ட்டிற்கு வருவது, யாருக்காவது சிபாரிசு செய்வது தான் எனது வேலை, அதேபோல தான் ஜெயக்கொடி அழைத்ததற்காக பொய்யான சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சோலைக்கொட்டாய் என்று சொல்லியுள்ளேன், 8ம் பிரதிவாதி தனம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் அதுவெல்லாம் எனக்கு தெரியாது. அவர் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எதற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஜெயக்கொடி சாட்சியம் அளிக்க அழைத்ததால் வந்துள்ளேன். சின்னசாமி, தனத்திற்கு இரண்டரை ஏக்கர் கிரயம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தனம் கடந்த 20 வருடத்திற்கு முன்பு கிரயம் பெற்று தனி சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. ஏதோ தனிப்பட்ட காரணத்திற்காக 8ம் பிரதிவாதி தனத்தை எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.06.13 13:56:16 +0530